உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

பெயர் :தீபன் சக்கரவர்த்தி(அ.சா.13)
தகப்பனார் பெயர் :கருப்பையா
கணவர் பெயர் :
வயது :42
கிராமம் கச்சிராயன்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :VAO

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

19.11.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களை கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்திருக்கிறேன். ஆஜர் 1வது எதிரி காவல்நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்ததில் நான் கையெழுத்து செய்தேன். ஆனால் நான் வாக்குமூலம் கொடுத்ததை நேரடியாக நான் பார்க்கவில்லை. சாட்சியிடம் அத்தாட்சி காட்டப்பட்டு, அதில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் பகுதியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.அத்தாட்சியில் என்ன பொருட்கள் யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்பது எனக்கு தெரியவில்லை. குடும்ப தகராறு காரணமாக கத்தியால் குத்தப்பட்டதாக ஆஜர் எதிரிகளை கைது செய்தார்கள். இது தொடர்பாக சாட்சியாக கையெழுத்திடுமாறு காவலர் கூறவே நான் கையெழுத்திட்டேன். சாட்சியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் பகுதியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

குணசேகரன் என்பவர் கிராம நிர்வாக உதவியாளராக பணியாற்றுகிறார் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்யும் போது கருங்காலக்குடியில் VAO ஆக பணியிி இருந்தேன். எனக்கு குணசேகர் உதவியாளராக இருந்தாரா என்றால் கொட்டாம்பட்டியில் உதவியாளராக இருந்தார். நானும் குணசேகரனும் கடந்த 03.06.2022ம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு கம்பூர் அரசு மேல்நிலைபள்ளி அருகே வரும்போது கொட்டாம்பட்டி காவல்ஆய்வாளர் குற்ற எண்.168/2022 என்ற வழக்கில் ஆஜர் எதிரிகளை கைது செய்து விசாரிக்கும்போது, நானும், குணசேகரனும் அருகில் இருக்கும் போது எதிரிகள் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் கையெழுத்தும், குணசேகர் 2வது கையெழுத்தும் போட்டுவிட்டு, மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி குற்றசம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட TN59BU 2623 என்ற TVS Apache இருசக்கர வாகனத்தை 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்யவும், தயார் செய்த அத்தாட்சியில் நானும் குணசேகரனும் கையெழுத்துவிட்டு, தற்போது, காலம் கடந்துவிட்டதால் ஞாபகமறதி அடிப்படையின் காரணமாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.19 21:25:25 +0530

Assistant Sessions Judge

Melur